பாட்டாளி மக்கள் கட்சி
தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்–2026
தேர்தல் அறிக்கை

இடம்: தலைமை அலுவலகம், தியாகராயர் நகர், சென்னை – 17 நாள்: 01.04.2026

முக்கிய அம்சங்கள்

வேலைவாய்ப்பு

1. 5 இலட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும்.
2. 2026–27, 2027–28 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 2.5 இலட்சம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட நான்காம் தொகுதிப் பணிகளுக்கு 35,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.
4. இரண்டாம் தொகுதிப் பணிகளுக்கு 10,000 பேர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
5. அரசுப் பள்ளிகளில் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம் நியமிக்கவும், காலியிடங்களை நிரப்பவும் ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். முதல்கட்டமாக 2025–26ஆம் ஆண்டில் 40,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.
6. காவல்துறை, தீயவிப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட சீருடைப் பணிகளுக்கு 20,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.
7. போக்குவரத்துத் துறையில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கு 10,000 பேர் நியமனம் செய்யப்படுவார்கள்.
8. மின்சார வாரியத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்பப் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், முதல்கட்டமாக 16,000 பணியிடங்கள் நிரப்பப்படும்.
9. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 4,000 மருத்துவர்கள், 3,000 மருத்துவத்துறைப் பணியாளர்கள் என மொத்தம் 7,000 பேர் நியமிக்கப்படுவர்.
10. தமிழக அரசால் தொடங்கப்படவுள்ள 30,000 காவிரி பல்பொருள் அங்காடிகளில் பணி செய்வதற்காக ஒரு இலட்சம் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
11. வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் வாரியத்திற்கு 12,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.
12. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒருவருக்கு அரசு அல்லது தனியார் துறையில் காலமுறை ஊதியத்துடன் கூடிய வேலை உறுதி செய்யப்படும்.
13. பட்டப்படிப்பை முடித்து வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும்.

ஒரு கோடி பேருக்கு வேலை

14. தனியார் துறை, சுயவேலைவாய்ப்புகள் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி பேருக்கு வேலை வழங்கப்படும்.

15. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் 50 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

16. ஒரு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கான பணிகளை மேற்கொள்ளத் தனித் துறை உருவாக்கப்படும்.

மது, கஞ்சா ஒழிப்பு

17. தமிழ்நாட்டில் முழு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

18. கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் நடமாட்டத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பஞ்சாப் மாநிலத்தில் செயல்படுத்தப்படுவதைப் போல் போதைப் பொருளுக்கு எதிரான போர் (War Against Drugs) என்ற இயக்கம் தொடங்கப்படும்.

19. தமிழ்நாடு காவல்துறையில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். அதன் தலைவராக டிஜிபி நிலை அதிகாரி பணியமர்த்தப்படுவார்.

20. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் வணிகத்தில் ஈடுபடுவோர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

21. போதைப் பொருட்கள் நடமாட்டம் குறித்து தகவல் தெரிவிக்க 987 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் அறிமுகம் செய்யப்படும்.

22. போதைப் பொருள் நடமாட்டம் குறித்து தகவல் தெரிவிப்போருக்கு ரூ.10,000 பரிசு.

நெல்லுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை

23. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை, இதில் குறைந்தபட்சம் ரூ.900 மாநில அரசின் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

24. ஒரு டன் கரும்புக்கு ரூ.5,000 கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்படும்.

25. நெல் முதல் எள் வரை அனைத்து விளைபொருட்களுக்கும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கும் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும்.

26. கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களையும் கொள்முதல் செய்யவும், அவற்றைக் கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யவும் வசதியாக வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் ஆணையம் அமைக்கப்படும்.

27. தமிழ்நாட்டில் வேளாண்துறை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 6% வளர்ச்சி அடைவதை உறுதி செய்யத் திட்டங்கள் வகுக்கப்படும்.

28. இடுபொருள் மானியமாக ஓர் உழவருக்கு அதிகபட்சமாக ரூ.30,000 வரை வழங்கப்படும்.

29. நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பில் 25% வேளாண் சார்ந்த துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

பயிர்க் கடன் தள்ளுபடி

30. நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை விற்பனை செய்யப்படும். குடும்ப அட்டைக்கு மாதத்திற்கு 2 கிலோ நாட்டு சர்க்கரை வழங்கப்படும்.

31. நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை நியாயவிலைக் கடைகள் மூலம் மானிய விலையில் விற்பனை செய்யப்படும்.

32. கூட்டுறவு வங்கிகளில் உழவர்கள் பெற்ற குறுகிய கால மற்றும் மத்தியக் காலப் பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

33. பொதுத்துறை வங்கிகளில் உழவர்கள் வாங்கிய ரூ.1 இலட்சம் வரையிலான பயிர்க் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.

34. வேளாண் சந்தைத் துறைக்குப் புதிய அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

35. அனைத்து மாவட்டங்களிலும் அங்கு அதிகம் விளையும் விளைபொருளுக்கு மதிப்புக்கூட்டும் வகையில் வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும்.

36. தமிழ்நாட்டில் இரு மாவட்டங்களுக்கு ஒரு வேளாண் கல்லூரி வீதம் மொத்தம் 20 வேளாண் கல்லூரிகள் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

37. தஞ்சாவூரிலும், நெல்லையிலும் வேளாண் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும்.

38. தருமபுரியில் தோட்டக்கலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும்.

வேளாண் மின் இணைப்பு

39. வேளாண் பயன்பாட்டுக்கான மின் இணைப்புக்கு விண்ணப்பித்து காத்திருக்கும் உழவர்கள் அனைவருக்கும் உடனடியாக மும்முனை மின்சார இணைப்பு வழங்கப்படும்.

40. 125 நாள் ஊரக வேலைத் திட்டம் தமிழ்நாட்டில் 150 நாட்களாக நீட்டிக்கப்படும்.

41. வேளாண் பணிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

42. வேளாண் பணியின் போது விஷப் பூச்சிகள், பாம்புகள் கடித்து உயிரிழக்கும் விவசாயிகளுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும்.

43. அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்கு உழவர்களுக்கு 60% மானியத்துடன் கடன் வழங்கப்படும்.

44. தனியாரிடம் உள்ள அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் உழவர்கள் வாடகைக்கு எடுப்பதற்கு வசதியாக செல்பேசி செயலி அறிமுகம் செய்யப்படும்.

ரூ.2 இலட்சம் கோடியில் நீர்ப்பாசன திட்டங்கள்

45. தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் கோடி செலவில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

46. புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ.20,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

47. தருமபுரி – காவிரி உபரிநீர்த் திட்டம், அரியலூர் – சோழர் பாசனத் திட்டம் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

48. காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

49. விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் நந்தன் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

12ஆம் வகுப்பு வரை அனைவருக்கு இலவசக் கல்வி

50. மழலையர் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படும். தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும்.

51. ஒவ்வொரு மாணவருக்கும் ஓராண்டுக்குக் கல்வி வழங்குவதற்காக மட்டும் ரூ.50,000 செலவிடப்படும்.

52. பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை 2026–27ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 7 ஆயிரம் கோடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

60,000 ஆசிரியர்கள் நியமனம்

53. 5 ஆண்டுகளில் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் என மொத்தம் 60,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

54. ஓராசிரியர் பள்ளிகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும். அடுத்த ஐந்தாண்டுகளில் 5ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் குறைந்தது 3 ஆசிரியர்களும், 8ஆம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகளில் குறைந்தது 6 ஆசிரியர்களும் இருப்பது உறுதி செய்யப்படும்.

55. ஆசிரியர் தகுதித் தேர்வில் (டெட்) வெற்றிபெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் போட்டித் தேர்வுகள் நடத்தப்படாது. அவர்கள் தகுதி காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் நேரடியாக நியமிக்கப்படுவார்கள்.

56. டெட் தேர்வில் தேர்ச்சி பெறாத 4 இலட்சம் ஆசிரியர்களின் எதிர்க்காலத்தை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு எளிமையான முறையில் சிறப்பு டெட் தேர்வு நடத்தப்படும்.

57. ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெறுவதற்கான தகுதி மதிப்பெண்கள் பொதுப் பிரிவினருக்கு 50%ஆகவும், அனைத்து இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கும் 40%ஆகவும் குறைக்கப்படும்.

58. அரசுப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையிலும், தொகுப்பூதிய அடிப்படையிலும் பணியாற்றும் கணினி ஆசிரியர்களும், பிற சிறப்பு ஆசிரியர்களும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள்.

59. 10, 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும்.

இலவச மடிக்கணினி – இலவச கைக்கணினி

60. அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் புத்தகப்பை இல்லாத கல்விமுறை அறிமுகம் செய்யப்படும்.

61. புத்தகப்பை இல்லாக் கல்வி முறையை செயல்படுத்துவதற்கு வசதியாக, 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கைக் கணினி வழங்கப்படும்.

62. அரசுப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச மடிக்கணினி வழங்கப்படும்.

63. மாணவர்களின் இடைநிற்றலைத் தடுப்பதற்காக ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ–மாணவியருக்கு 10ஆம் வகுப்பில் மாதம் ரூ.500 வீதமும், 11, 12ஆம் வகுப்புகளில் மாதம் ரூ.1,000 வீதமும் நிதியுதவி வழங்கப்படும்.

பட்டப்படிப்புக்கு கல்விக் கட்டணம் இல்லை

64. அரசு கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் அனைவருக்கும் பட்டப்படிப்பு கட்டணமின்றி வழங்கப்படும்.

65. அனைத்துத் தொகுதிகளிலும் ஓர் அரசு கலைக் கல்லூரி செயல்படுவது உறுதி செய்யப்படும்.

66. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு மகளிர் அரசு கலைக் கல்லூரிகள் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

67. மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரி இருக்கும் வகையில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்.

68. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் 1000 பேரும், மாணவிகளில் 1000 பேரும் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுவர். இதற்கான அனைத்துச் செலவுகளையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும்.

69. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆண்டுக்கு 2 ஆயிரம் பேர் வீதம் ஐந்தாண்டுகளில் 10 ஆயிரம் உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

70. உதவிப் பேராசிரியர் நியமனங்களில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பணியிடங்கள், பல்கலைக் கழக மானியக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி பெற்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஒதுக்கப்படும்.

71. உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் வரை அவற்றில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கான ஊதியம் ரூ.50,000ஆக உயர்த்தப்படும்.

நீட் தேர்வு விலக்கு

72. மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான நீட் எனப்படும் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மட்டும் விலக்கு பெறப்படும்.

73. உயர்கல்வி முடித்து 2 ஆண்டுகளுக்குள் பணியில் சேராத மாணவர்கள் பெற்ற கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இந்தக் கடன் தொகையை அரசே செலுத்தும்.

செயற்கை அறிவுத் திறன் பல்கலைக்கழகம்

74. சென்னையில் செயற்கை அறிவுத் திறன் பல்கலைக் கழகம் (Artificial Intelligence (AI) University) தொடங்கப்படும்.

75. கோவையில் திறன் பல்கலைக் கழகம் (Skill University) தொடங்கப்படும்.

76. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணா பல்கலைக் கழகமும் திறன்சார் அறிவு மையங்களாகத் (Centre of Excellence) தரம் உயர்த்தப்படும்.

77. தேசிய அளவில் பல்கலைக்கழக மானியக் குழு செயல்படுவதைப் போன்று, தமிழ்நாட்டில் தமிழ்நாடு பல்கலைக் கழக மேலாண்மை ஆணையம் என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப்படும்.

78. நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், தனியார் கல்லூரிகளில் இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்

79. காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும். கடலூர் மாவட்டத்தில் இரண்டாவது அரசு மருத்துவக் கல்லூரி கடலூரில் அமைக்கப்படும்.

80. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில் செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் (IVF Centres) அமைக்கப்படும்.

81. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எங்கெல்லாம் இதய அறுவைச் சிகிச்சை மையம், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மையம் போன்றவை இல்லையோ, அங்கெல்லாம் அவை உள்ளிட்ட அனைத்துத் துறை அறுவைச் சிகிச்சை மையங்கள் தொடங்கப்படும்.

82. அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முதியோர் சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்படும்.

83. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவு முழு அளவில் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

84. தஞ்சாவூர், கோவை, சேலம், வேலூர், நெல்லை ஆகிய நகரங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் எய்ம்ஸ்க்கு இணையானவையாகத் தரம் உயர்த்தப்படும்.

85. மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி தென்னிந்தியாவின் முதலாவது உயர் சிறப்பு மருத்துவ மையமாகத் (Center of excellence) தரம் உயர்த்தப்படும்.

86. அரசு மருத்துவக் கல்லூரிகளில், செவிலியர் பயிற்சிக் கல்லூரி இல்லாத இடங்களில் புதிய செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்படும்.

அனைவருக்கும் தரமான இலவச மருத்துவம்

87. தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமனைகளிலும் உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சை இலவசமாக வழங்கப்படும்.

88. வருமான வரம்பின்றி அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும். அதற்கான பிரீமியத் தொகையைத் தமிழக அரசே செலுத்தும்.

89. தமிழ்நாட்டில் 50 வயதைக் கடந்த அனைவருக்கும் முழு மருத்துவப் பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படும்.

ஒரு இலட்சம் ஆஷாக்கள் நியமனம்

90. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 79,394 ஊர்களிலும் மருத்துவச் சேவை வழங்க வசதியாக, ஒரு இலட்சம் ஆஷாக்கள் நியமிக்கப்படுவார்கள்.

91. பள்ளிக் குழந்தைகளின் மதிய உணவில் அவர்களுடைய ஒரு நாள் தேவைக்கான வைட்டமின்களும், தாது உப்புக்களும் இருப்பது உறுதி செய்யப்படும்.

92. 108 அவசர ஊர்திகளின் எண்ணிக்கை 2,500 ஆக உயர்த்தப்படும்.

மகப்பேறு கால நிதியுதவி ரூ.25,000

93. கருவுற்ற பெண்களுக்கான மகப்பேறு கால நிதிஉதவி ரூ.25,000 ஆக உயர்த்தப்படும்.

94. அனைத்துக் குழந்தைகளுக்கும் 100% தடுப்பூசி மற்றும் தடுப்பு மருந்துகள் வழங்கப்படும்.

95. பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வயது நிறைவடையும் வரை குழந்தையின் தாய்க்கு நாள்தோறும் ஒரு லிட்டர் பால் இலவசமாக வழங்கப்படும்.

சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு

96. மாநில அரசின் சார்பில் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தப்படும்.

97. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில், வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்படும்.

98. யாதவர்கள், முத்தரையர்கள், விஸ்வகர்மாக்கள் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்க வகை செய்யப்படும்.

99. நாவிதர், வண்ணார், பருவதராசகுலம், ஒட்டர், வலையர், அம்பலக்காரர், குரும்பர், குயவர், வேட்டுவக்கவுண்டர், ஊராளி கவுண்டர் ஆகிய 10 சமுதாயங்களையும் கொண்ட தனி இடஒதுக்கீட்டுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

100. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் உள்ள பிற சமூகங்களுக்கும் கோரிக்கையின் அடிப்படையில் உள்ஒதுக்கீடு / தொகுப்பு ஒதுக்கீடு வழங்கப்படும்.

101. தமிழகத்தில் பிற பகுதிகளில் வாழும் குரும்பர்கள், குரும்பக்கவுண்டர்கள் ஆகிய சமுதாயங்களைப் பழங்குடியினர் வகுப்பில் சேர்க்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

102. உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும்.

103. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பட்டியலினச் சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவது குறித்துப் பரிந்துரைப்பதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும்.

104. கிறித்தவ வன்னியர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

105. கிறித்தவ மதத்திற்கு மாறிய பட்டியலின மக்களுக்கும், பட்டியலினத்தவருக்கான இடஒதுக்கீடு தொடர்ந்து கிடைக்க வகை செய்யப்படும்.

106. ஆந்திர மாநிலத்தைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள சமுதாயங்களில், 30 ஆயிரத்திற்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட அனைத்துச் சாதிகளுக்கும், தனித்தனியாக நலவாரியங்கள் அமைக்கப்படும்.

107. தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80% பணியிடங்கள் தமிழக இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கிப் புதிய சட்டம் இயற்றப்படும்.

108. தமிழ்நாட்டில் உள்ள மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களில் தொழிலாளர் நிலைப் பணிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 100% இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

109. மாநிலங்களில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் இடமாற்றம் செய்யப்படாத இடைநிலைப் பணியிடங்களில் 50% பணியிடங்கள் மாநில ஒதுக்கீடாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

110. தமிழ்நாட்டில் உள்ள சென்னை இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.டி.), உள்ளிட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் 50% இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தி வெற்றிபெறும்.

111. தனியார்துறை வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

112. நீதித்துறையிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தப் பா.ம.க. பாடுபடும்.

113. நீதித்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வசதியாக உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வதற்காக நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.

முதலமைச்சர் – அமைச்சர்களின் சொத்து விவரங்கள்

114. தமிழ்நாடு அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்துப் பரிந்துரைக்க உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் அமைக்கப்படும்.

115. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் சொத்து விவரங்கள் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தின் முதல் பணி நாளில் வெளியிடப்பட்டு, மக்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

116. புதிய அரசு பதவியேற்று ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் அமைச்சர்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவுகள் மக்கள் பார்வைக்காக வெளியிடப்படும்.

117. தமிழ்நாட்டின் நிர்வாக வசதிக்காக 2ஆவது தலைநகராகத் திருச்சியும், 3ஆவது தலைநகரமாக மதுரையும் அறிவிக்கப்படும்.

118. ஆண்டுக்கு நான்கு முறை சட்டப் பேரவை கூடுவதும், நூறு நாட்கள் கூட்டத் தொடர் நடப்பதும் உறுதி செய்யப்படும்.

119. சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.

சேவை உரிமைச் சட்டம்

120. தமிழ்நாட்டில் முடக்கப்பட்டுள்ள லோக்அயுக்தா அமைப்பு வலிமையானதாக மாற்றப்படும். முதலமைச்சரும் அமைச்சர்களும் லோக்அயுக்தாவின் அதிகார வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள்.

121. அரசு நிர்வாகத்தில் ஊழலை ஒழிக்கப் பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும்.

122. தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சேவைகளில் சாத்தியமான சேவைகள் அனைத்தும் இணைய வழியில் வழங்கப்படும்.

123. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுவாரியம் (TNTRB), தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) ஆகிய அமைப்புகள் மட்டுமே அரசுப் பணிகளுக்கு ஆள் தேர்வு செய்யும். மீதமுள்ள தேர்வு வாரியங்கள் கலைக்கப்பட்டு, அவற்றின் பணிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்கப்படும்.

ரூ.6 இலட்சம் கோடி ஊழல் – விசாரணை

124. திமுக ஆட்சியில் மணல் கொள்ளை, கனிமவளக் கொள்ளை, பணியாளர் நியமன ஊழல், ஒப்பந்த ஊழல், பணியிட மாற்ற ஊழல், மது வணிகத்தில் வரி ஏய்ப்பு என ரூ.6 இலட்சம் கோடி அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவை குறித்துத் தனித்தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்படும்.

125. அமைச்சர்கள், அதிகாரிகள் மீதான மீதான வழக்குகளை விசாரிப்பதற்காகச் சென்னையில் 3 சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோவையில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்படும்.

8 மாவட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டை

126. தமிழ்நாட்டில் சிப்காட் தொழிற்பேட்டைகள் இல்லாத திருப்பத்தூர், இராமநாதபுரம், மதுரை, கரூர், நாமக்கல், திருப்பூர், தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குறைந்தபட்சம் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை, அடுத்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும்.

127. தருமபுரி சிப்காட்டை உடனடியாக செயல்பாட்டுக்குக் கொண்டுவரவும், தொழிற்சாலைகளை தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

128. காவிரிப் பாசன மாவட்டங்களில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் தொடங்கப்படும்.

விளைநிலங்கள் கையகப்படுத்தப்படாது

129. சிப்காட் தொழிற்பேட்டைகளை அமைக்க வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்படாது. அரசு நிலங்கள் மற்றும் தரிசு நிலங்களில் மட்டுமே சிப்காட் அமைக்கப்படும்.

130. செய்யாறு சிப்காட் வளாகத்தை விரிவுபடுத்துவதற்காக மேல்மா உள்ளிட்ட 11 ஊர்களில் 2,700 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டம் கைவிடப்படும்.

131. சிப்காட் தொழிற்பேட்டைகளுக்காக மக்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் கையகப்படுத்தப்படும் போது, அவற்றின் மொத்த மதிப்பு கணக்கிடப்பட்டு, அதில் 50% பணமாகவும், மீதமுள்ள 50 விழுக்காட்டுக்குத் தொழிற்சாலைப் பங்குகளாகவும் வழங்கப்படும்.

தொழில் முதலீடுகள் வெள்ளை அறிக்கை

132. தமிழ்நாட்டில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதம் 2026, 2028, 2030 ஆகிய ஆண்டுகளில் உலகத் தொழில் முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்படும்.

133. காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.1 இலட்சம் கோடி முதலீடு திரட்டும் நோக்குடன் ஆண்டுதோறும் வேளாண் முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும்.

134. ஒவ்வொரு ஆண்டும் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை, அவற்றின் மதிப்பு, திறக்கப்பட்ட தொழிற்சாலைகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நிலை, கிடைத்த வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1ஆம் தேதி வெளியிடப்படும்.

3.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம்

135. தமிழ்நாட்டின் ஆண்டுப் பொருளாதார உற்பத்தி மதிப்பை 2047ஆம் ஆண்டில் 3.5 டிரில்லியன் அமெரிக்க டாலராக ($ 3.5 இலட்சம் கோடி) உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

136. தமிழகத்தின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காட்டுக்கும் கூடுதலாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

137. தமிழக அரசின் வரி அல்லாத வருவாயை ஆண்டுக்கு ரூ.2 இலட்சம் கோடியாக உயர்த்த நடவடிக்கை.

நிதிப் பற்றாக்குறை குறைப்பு

138. தமிழ்நாட்டில் வருவாய்ப் பற்றாக்குறை ஒழிக்கப்படும்.

139. நிதிப் பற்றாக்குறைக் குறைக்கப்படும்; கடன் சுமை கணிசமாகக் குறைக்கப்படும்.

140. அரசின் செலவுகளைக் குறைக்க சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொதுத்துறை நிறுவனங்களில் ரூ.50,000 கோடி மறுமுதலீடு

141. தமிழ்நாட்டில் நட்டத்தில் இயங்கி வரும் 46 பொதுத் துறை நிறுவனங்களை இலாபத்தில் இயக்கச் செய்வதற்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் கோடி வீதம் மொத்தம் ரூ.50,000 கோடி மறுமுதலீடு செய்யப்படும்.

142. தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் அதிக அளவில் மறுமுதலீடு செய்யப்படும்.

143. தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதன் மூலம் மின்வாரியத்தை இலாபத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

144. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வீண் செலவைத் தவிர்க்கக் கடுமையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

மாதம் ரூ.2,000 மகளிர் உரிமைத் தொகை

145. குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும்.

146. மகளிருக்கான உரிமைத் தொகை எந்த நிபந்தனைகளும் இல்லாமல் அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் வழங்கப்படும்.

147. பெண்களின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில், ஏழைப் பெண்கள் தொழில் தொடங்க ரூ.25,000 கடன் வழங்கப்படும். இதில் ரூ.10,000 மானியம் போக, ரூ.15,000–ஐ இரு ஆண்டுகளில் செலுத்தினால் போதுமானது.

148. ஏழைப் பெண்கள் தொழில் தொடங்குவதற்கான ரூ.25,000 கடன் மொத்தம் ஒரு கோடிப் பேருக்கு வழங்கப்படும்.

149. மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கல்வி நிலையங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும், ஆள் நடமாட்டமில்லாத இடங்களிலும் வலிமையான கண்காணிப்பு காமிரா கட்டமைப்பு உருவாக்கப்படும்.

150. சமூக விரோதிகள் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் செய்ய வாய்ப்புள்ள இடங்களில் சாதாரண உடையில் ஆண், பெண் காவலர்களால் மறைந்திருந்து கண்காணிக்கப்படும்.

151. பெண்களுக்கான திருமண வயதை 21ஆக உயர்த்தும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

152. தமிழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் திருநங்கையர்களுக்கு 1% தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

153. குடும்பத்தைப் பிரிந்து வாழும் திருநங்கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வசதியாக விடுதிகள் அமைத்துத் தரப்படும்.

ரூ.10–க்கு மக்கள் சாப்பாடு

154. ஏழைத் தொழிலாளர்களின் நலன் கருதி, ரூ.10–க்குச் சோறு, சாம்பார், ரசம், தயிர், கூட்டு, பொரியல், ஊறுகாயுடன் நிறைவான மதிய உணவு வழங்கப்படும்.

155. ஞாயிற்றுக் கிழமைகளில் ரூ.25–க்கு அசைவ மதிய உணவு வழங்கப்படும்.

156. நியாய விலைக் கடைகளில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கிலோ கடலை எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படும்.

157. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் வெள்ளைச் சீனியின் அளவு பாதியாகக் குறைக்கப்பட்டு, அதற்கு இணையான அளவு சர்க்கரை அல்லது வெல்லம் மானிய விலையில் வழங்கப்படும்.

158. நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு மட்டுமே இப்போது வழங்கப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக ஒரு கிலோ உளுந்து வழங்கப்படும்.

159. நியாய விலைக் கடைகளில் ரூ.500–க்கு மளிகைப் பொருள் தொகுப்பு வழங்கப்படும்.

160. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு இரு கறவை மாடுகளை வாங்க 50% மானியத்தில் கடன் வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு பங்களிப்பில்லா ஓய்வூதியத் திட்டம்

161. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஓய்வூதியத் திட்டத்திற்காக அரசு ஊழியர்கள் எவரும் பங்களிப்புத் தொகை செலுத்தத் தேவையில்லை.

162. எட்டாம் ஊதியக் குழு அதன் அறிக்கையைத் தாக்கல் செய்தவுடன், அதன் பரிந்துரைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும். அதன் அடிப்படையில், 2026 ஜனவரி ஒன்றாம் தேதி முதல் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

163. எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை, 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்றாம் தேதி முதல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களின் ஊதிய விகிதத்திற்கு ஏற்றவாறு மாதம் ரூ.3,000 முதல் ரூ.10,000 வரை இடைக்கால நிவாரணம் வழங்கப்படும்.

164. எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது, இடைநிலை ஆசிரியர்கள், அரசு மருத்துவர்கள், நிலஅளவை ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவரின் ஊதிய முரண்பாடுகளும் களையப்படும். அரசு மருத்துவர்களுக்கு அவர்களின் பணிக்காலத்தில் 5, 9, 11, 12 ஆண்டுகளில் காலம் சார்ந்த ஊதிய உயர்வு வழங்கப்படும்.

165. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

166. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பதவி உயர்வுக்குத் தடையாக இருக்கும் அரசாணை எண் 243 இரத்து செய்யப்படும்.

167. பகுதி நேரப் பள்ளி ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலகப் பணியாளர்கள் பணி நிலைப்புச் செய்யப்படுவார்கள். அவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

168. ஓய்வூதியம் பெறுவதற்கான குறைந்தபட்சப் பணிக்காலம் 30 ஆண்டுகளில் இருந்து 25 ஆண்டுகளாகக் குறைக்கப்படும்.

அமைப்புசாரா தொழிலாளர்கள்

169. உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்கள், மளிகைப் பொருட்கள், காய்கறிகள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள், பார்சல்கள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள், வாடகை மகிழுந்து, இரு சக்கர ஊர்திகளை இயக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் கிக் தொழிலாளர்களுக்கு, விநியோகக் கட்டணம் வழங்குவது மட்டுமின்றி, அடிப்படை ஊதியம் வழங்குவது கட்டாயமாக்கப்படும்.

170. அடிப்படை ஊதியம், விநியோகக் கட்டணத்தின் ஆண்டுச் சராசரி ஆகியவற்றைக் கணக்கிட்டு, இரண்டாம் ஆண்டில் இருந்து கிக் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்யப்படவேண்டும்; மருத்துவக் காப்பீட்டு வசதியும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும்.

171. தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்திருக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும், அவர்கள் பதிவு செய்த நாளில் இருந்து மூன்றாவது ஆண்டு நிறைவடைந்தபின் 50% மானியத்தில் இருசக்கர ஊர்திகள் வழங்கப்படும்.

மூலதனச் செலவுகளுக்கு ஆண்டுக்கு ரூ.1.25 இலட்சம் கோடி ஒதுக்கீடு!

172. தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2026–27ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் கோடி செலவிடப்படும்.

173. தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் உட்கட்டமைப்புத் தேவையை மதிப்பீடு செய்து, நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாடு கட்டமைப்பு ஆணையம் என்ற புதிய அமைப்பைத் தமிழக அரசு உருவாக்கும்.

174. சேலம், தூத்துக்குடி விமான நிலையங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

175. வேலூருக்கு விமானச் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவை, மதுரையில் மெட்ரோ ரயில்

176. கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உரிய தரவுகளைத் திரட்டி, அத்திட்டங்களுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

177. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (BRT - Bus Rapid Transit) செயல்படுத்தப்படும்.

178. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம்கட்டப் பணிகள் முழுவதும் 2028ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

179. சென்னை விமான நிலையம் – கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இடையிலான மெட்ரோ ரயில் திட்டம் உரிய ஒப்புதல்கள் மற்றும் நிதியுதவி பெற்று நடப்பாண்டு இறுதிக்குள் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

பேருந்துக் கட்டணம் உயராது

180. தமிழ்நாட்டில் உள்ள 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களையும் மேம்படுத்தி, இலாபத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

181. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 10 ஆயிரம் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

182. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் அவற்றை இலாபத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்; பேருந்துக் கட்டண உயர்வு தவிர்க்கப்படும்.

183. தமிழ்நாடு முழுவதும் நகரப் பேருந்துகளில் அனைவரும் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

மின் கட்டணம் குறைக்கப்படும்

184. தமிழ்நாட்டில் 2026 ஜூன் மாதம் முதல் கட்டப்படும் தனி வீடுகள், அலுவலகக் கட்டிடங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பொதுப் பயன்பாட்டுக்கான இடங்கள் ஆகியவற்றின் மேல் தளத்தில் சூரியஒளி மின்சாரக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்படும்.

185. வீடுகளுக்கான மின்சாரக் கட்டணச் செலவைக் குறைக்கும் வகையில், வாய்ப்புள்ள வீடுகளில் சூரியஒளி மின்உற்பத்திக் கட்டமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

186. ஒரு கிலோ வாட் சூரிய ஒளி மின்உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்த மத்திய அரசின் சார்பில் ரூ.30,000 மானியம் வழங்கப்படும் நிலையில், தமிழக அரசின் சார்பில் ரூ.10,000 கூடுதல் மானியம் சேர்த்து ரூ.40,000 வழங்கப்படும்.

187. 2 கிலோ வாட் சூரிய ஒளி மின்உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்த மத்திய அரசின் சார்பில் வழங்கப்படும் ரூ.60,000 மானியத்துடன் தமிழக அரசின் பங்காக ரூ.20,000 சேர்த்து, ரூ.80,000ஆக மானியம் வழங்கப்படும்.

188. 3 கிலோ வாட் அல்லது அதற்கும் கூடுதலான சூரியஒளி மின் திட்டங்களுக்கு மத்திய அரசின் சார்பில் ரூ.78,000 நிதியுதவி வழங்கப்படும் நிலையில், ரூ.22,000 மாநில அரசின் மானியமாகச் சேர்த்து ரூ.1,00,000 வழங்கப்படும்.

189. தமிழ்நாட்டில் மின்உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் நோக்குடன், தற்போது நிலுவையில் உள்ள 5,700 மெகாவாட் மின் திட்டங்கள் அடுத்த 3 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு மின்உற்பத்தி தொடங்கப்படும்.

ஸ்மார்ட் மீட்டர்கள் இலவசம்

190. வீடுகளின் மின் இணைப்புக்கான மீட்டர்களை ஸ்மார்ட் மீட்டர்களாக மாற்ற ரூ.15,000 செலவாகும் என திமுக ஆட்சியில் மதிப்பிடப்பட்ட நிலையில், அனைத்து வீடுகளுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.

191. தமிழ்நாட்டில் இரு மாதங்களுக்கு ஒருமுறை மின் பயன்பாடு கணக்கிடப்படும் முறையை மாற்றி, மாதத்திற்கு ஒருமுறை மின் பயன்பாட்டைக் கணக்கிடும் முறை அறிமுகப் படுத்தப்படும்.

192. தமிழ்நாட்டில் வீடுகளுக்கான மின் பயன்பாட்டுக் கட்டணம் 25% வரை குறைக்கப்படும்.

193. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திமுக ஆட்சியில் உயர்த்தப்பட்ட மின்கட்டண உயர்வும், நிலைக்கட்டண உயர்வும் முழுமையாக ரத்து செய்யப்படும்.

194. சிறு–குறு விசைத்தறியாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தின் அளவு, 500 யூனிட்டுகளில் இருந்து 1000 யூனிட்டுகளாக உயர்த்தப்படும். இச்சலுகை 10 குதிரைத் திறன் மோட்டாரில் இருந்து 15 குதிரைத்திறன் மோட்டார்களுக்கும் நீட்டிக்கப்படும்.

195. 2027ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு மின்சார வாரியம் இலாபத்தில் இயங்குவது உறுதி செய்யப்படும்.

மூத்த குடிமக்கள் ஓய்வூதியம் ரூ.2,000

196. முதியோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஓய்வூதியம் இப்போதுள்ள ரூ.1,200–லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்படும்.

197. திமுக ஆட்சியில் யாருக்கெல்லாம் முதியோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதோ, அவர்கள் அனைவருக்கும் மீண்டும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

198. 60 வயதான அனைவருக்கும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாலைச் சிற்றுண்டி

199. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர் மாலையில் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது சிற்றுண்டி வழங்கப்படும்.

200. கிராமப்புறக் கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளின் ஓய்வூதியத்தை இப்போதுள்ள ரூ.3 ஆயிரத்திலிருந்து, ரூ.6 ஆயிரமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

201. கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றுக்கான மின் கட்டணம் 50% குறைக்கப்படும்.

இஸ்லாமியர் இடஒதுக்கீடு உயர்வு

202. சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்ட பிறகு இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

203. தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் அச்சத்தைப் போக்கும் வகையில் தேசியக் குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்படாது.

204. தமிழ்நாட்டில் தேசிய மக்கள்தொகைப் பதிவேடு தயாரிக்கும் போது பெற்றோரின் பிறப்பிடம், பிறந்த தேதி, ஆதார் எண் ஆகியவை தொடர்பான 6 வினாக்கள் எழுப்பப்படாது.

205. கிரீமிலேயர் வருமான வரம்பை இப்போதுள்ள 8 இலட்ச ரூபாயிலிருந்து 18 இலட்ச ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தி வெற்றிபெறும்.

206. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவதற்கான நீதிபதி ரோகிணி ஆணையப் பரிந்துரைகளை செயல்படுத்தும்படி மத்திய அரசைப் பாமக வலியுறுத்தும்.

12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் மீட்கப்படும்

207. பட்டியலினம் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்டு, செல்வாக்கு மிக்கவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் மீட்கப்படும்.

208. பட்டியலின மாணவர்கள் விடுதிக்கு வழங்கப்படும் உணவுப் படி இரு மடங்காக உயர்த்தப்படும். மாணவர்களுக்குப் புரதச் சத்து மிக்க உணவு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

209. கைத்தறித் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

210. பட்டு நெசவாளர்களுக்கு 30% கூலி உயர்வு வழங்கப்படும்.

211. சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து பட்டுப் புடவைகள் இறக்குமதி செய்யத் தடை விதிக்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தி வெற்றி பெறுவோம்.

பசுவின் பாலுக்கு ரூ.45 விலை

212. ஆவின் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பசுவின் பாலுக்கு லிட்டருக்கு 45 ரூபாயும், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு 55 ரூபாயும் கொள்முதல் விலையாக வழங்கப்படும்.

213. ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதல் இலக்கு ஒரு நாளைக்கு 50 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும்.

214. சேலம், வேலூர், கடலூர் உள்ளிட்ட 25 நகரங்களில் வணிகர்களின் நலனுக்காக குறைந்த வாடகைக் கொண்ட வணிக வளாகங்கள் கட்டப்படும்.

215. வணிகர்களின் குறைகளை களைய, வணிகர்கள் நலத்துறை என்ற தனி அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

மீன்பிடித் தடைக்கால நிவாரணம் ரூ.15,250ஆக உயர்த்தப்படும்

216. மீன்பிடித் தடைக்காலத்தில், ஒரு நாளைக்கு ரூ.250 வீதம் 61 நாட்களுக்கு ரூ.15,250 மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக வழங்கப்படும்.

217. மழைக் கால நிவாரணமாக மீனவர்களுக்கு ரூ.6,000 வழங்கப்படும்.

218. மீனவர்களுக்குப் படகுகளும், வலைகளும் மானிய விலையில் வழங்கப்படும்.

219. கச்சத் தீவை மீட்க உறுதியான, உண்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

220. இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

221. சிங்களப் படையினரால் சேதப்படுத்தப்பட்ட படகுகளைச் சரிசெய்ய முழு நிதியுதவி வழங்கப்படும்.

மீனவர்களுக்கு உள் இடஒதுக்கீடு

222. மத்திய அரசில் மீனவர் நலனுக்காகத் தனி அமைச்சகம் ஏற்படுத்தும்படி மத்திய அரசை வலியுறுத்திச் சாதிப்போம்.

223. கடல் வளத்தை அழிக்கும் வகையில் கடலோரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அணுஉலை மற்றும் வேதித் தொழிற்சாலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

224. விசைப்படகு மீனவர்களுக்கு வழங்கப்படும் மானிய விலை டீசலின் அளவு ஆண்டுக்கு 20,000 லிட்டராக உயர்த்தப்படும்.

225. நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்படும் மானிய டீசல் அளவு ஆண்டுக்கு 5,000 லிட்டராக அதிகரிக்கப்படும்.

சென்னையில் ஆசிய விளையாட்டுப் போட்டி

226. 23ஆம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுத் தரும்படி இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் மத்திய அரசின் வாயிலாக வலியுறுத்தப்படும்.

227. ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குச் சென்னையை தயார்படுத்தும் வகையில் சென்னைப் புறநகர்ப் பகுதியில் விளையாட்டு கிராமம் அமைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

228. தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள அனைத்து இடங்களிலும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்படும்.

229. அனைத்து ஊராட்சிகளிலும் உடற்பயிற்சி மையங்கள் மற்றும் நடைப்பயிற்சிப் பாதைகள் ஏற்படுத்தப்படும்.

போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள்

230. படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வழிகாட்டத் தனி மையங்கள் அமைக்கப்படும்.

231. அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

232. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டின் அளவு 5 விழுக்காடாக உயர்த்தப்படும்.

233. தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 5% இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகச் சட்டம் இயற்றப்படும்.

234. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ.6,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஊடகம், பத்திரிகையாளர் நலன்

235. தமிழ்த் திரையுலகில் சிறிய முதலீட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 2,000 திரைப்படங்கள் வெளியிட முடியாமல் முடங்கிக் கிடக்கின்றன. இந்தத் திரைப்படங்கள் அனைத்தும் அடுத்த 3 ஆண்டுகளில் வெளியாவது உறுதி செய்யப்படும்.

236. தமிழ்நாட்டில் வலிமையுள்ள சிலர் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, திரையரங்குகள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு முடிவு கட்டப்படும்.

237. திரைப்படங்களுக்குத் தனித் தமிழில் பெயர் வைக்கப்பட்டால், 8% கேளிக்கை வரி செலுத்துவதில் இருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும்.

238. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பத்திரிகையாளர் நல வாரியத்திற்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்.

239. உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனப் பணியாளர்களுக்குப் பத்திரிகையாளர் ஊதியக் குழுப் பரிந்துரைப்படி ஊதியம் வழங்குவது உறுதி செய்யப்படும்.

240. சென்னைத் திருவான்மியூரில் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று, சென்னைப் புறநகர்ப் பகுதியில் ஆயிரம் வீடுகளைக் கொண்ட பத்திரிகையாளர் குடியிருப்பு உருவாக்கப்படும்.

241. மாவட்டத் தலைநகரங்களிலும் பத்திரிகையாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

ஈழத் தமிழர் நலன்

242. இலங்கை இனப் படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து பன்னாட்டு நீதிமன்ற விசாரணை நடத்த மத்திய அரசு மூலம் அழுத்தம் தரப்படும்.

243. ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

244. தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் தன்மானத்துடன் வாழும் வகையில் அனைத்து வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படும்.

சுற்றுச்சூழல் – குவாரிகள் மூடப்படும்

245. தமிழ்நாட்டில் அனைத்து மணல் குவாரிகளும் மூடப்படும்.

246. தமிழ்நாட்டில் தனியார் நிலங்களில் செயல்பட்டு வரும் கல்குவாரிகள் மூடப்படும்.

247. தமிழ்நாட்டில் நகரங்கள் அனைத்திலும் மற்றும் மாவட்டங்கள் தோறும் முழுமையான தூய காற்றுச் செயல்திட்டம் (Clean Air Action Plan) செயலாக்கப்படும்.

248. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

249. தமிழகத்தின் 42,978 சதுப்புநிலங்களும் 2017 சதுப்புநில விதிகளின் கீழ் சதுப்புநிலமாகச் சட்டப்படி அறிவிக்கை (Notification) செய்யப்பட்டு முழுமையாக பாதுகாக்கப்படும்.

சட்டம் – ஒழுங்கு

250. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றக் காவல்துறைக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்படும்.

251. காவல் துறைச் சுதந்திரத்தை உறுதி செய்ய மாநிலப் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்படும்.

252. தமிழகக் காவல்துறையில் தலைமை இயக்குநர் (டிஜிபி) பணியிடங்களின் எண்ணிக்கை 15ஆக உயர்த்தப்படும்.

253. காவல்துறையினருக்கு 8 மணி நேரப் பணிவரம்பு நிர்ணயிக்கப்படும்.

254. காவலர்களுக்கு ஏழு ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு வழங்கப்படும்.

255. காவலராகப் பணியில் சேருபவர்கள், ஓய்வுபெறும்போது ஆய்வாளர் நிலைக்குப் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்.

256. ஊர்க்காவல் படையில் பணியாற்றி வரும் இளைஞர்களுக்குக் காவலர் ஆவதற்கான தகுதியும் திறமையும் இருந்தால், அவர்கள் காவல்துறையில் பணி மூப்புடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

கூடுதல் போக்சோ, மகளிர் நீதிமன்றங்கள்

257. உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

258. உயர்நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

259. போக்சோ வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்க அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

260. பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

தமிழ் மொழி வளர்ச்சி

261. தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டம், மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் (சிபிஎஸ்இ) பாடத் திட்டம் உள்ளிட்ட அனைத்துப் பாடத் திட்டங்களையும் பின்பற்றும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும்.

262. தமிழ்நாட்டில் 8ஆம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பயிற்றுமொழியாக்கிச் சட்டம் இயற்றப்படும்.

263. மருத்துவம், பொறியியல் படிப்புகள் தமிழ் வழியில் கற்பிக்கப்படும். அதற்கான பாடநூல்கள் தமிழில் மொழி பெயர்த்து வழங்கப்படும்.

264. தமிழ்நாட்டு மாணவர்கள் பிற மொழிகள் கற்க விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை அரசே செய்து கொடுக்கும்.

265. குழந்தைகளுக்கு தனித்தமிழில் பெயர் சூட்டும் பெற்றோருக்கு ரூ.5 ஆயிரம் வெகுமதி வழங்கப்படும்.

சென்னை மாநகரம்

266. சென்னையில் MTC பேருந்துகள் எண்ணிக்கை 8000ஆக அதிகமாக்கப்படும். புதிய பேருந்துகள் அனைத்தும் மின்சாரப் பேருந்துகளாக இயக்கப்படும்.

267. அனைத்து MTC பேருந்துகளும் அனைவருக்கும் இலவசம் ஆக்கப்படும்.

268. சென்னை மாநகரச் சாலைகளும், தெருக்களும் பள்ளங்கள் இல்லாதவையாக மாற்றப்படும். எந்த அமைப்பும் முன்அனுமதி இல்லாமல் விருப்பம்போல் பள்ளம் தோண்டத் தடை விதிக்கப்படும்.

269. யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள செஞ்சிக் கோட்டை சுற்றுலாத்தலமாக மாற்றப்படும்.

270. தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்படும் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை (தூத்துக்குடி), கொடுமணல் (ஈரோடு), வெம்பக்கோட்டை, துலுக்கர்பட்டி, கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேடு, கொற்கை (தூத்துக்குடி) ஆகிய பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுத் தொல்லியல் சுற்றுலாத் திட்டம் உருவாக்கிச் செயல்படுத்தப்படும்.

271. சம்புவராய மன்னர்களுக்குப் படைவீட்டிலும், காடவராய மன்னர்களுக்குச் சேந்தமங்கலத்திலும், வீர வல்லாள மகாராஜாவுக்குத் திருவண்ணாமலையிலும் மணிமண்டபங்கள் கட்டப்படும். மணி மண்டபத்தில் அவர்களின் சிலைகளும், வாழ்க்கை வரலாற்றை விளக்கும் படங்கள் அடங்கிய காட்சிக்கூடமும் அமைக்கப்படும்.

272. விடுதலைப் போராட்ட வீரர் அர்த்தநாரீச வர்மா அவர்களுக்குச் சேலத்தில் மணிமண்டபமும், திருவண்ணாமலையில் சிலையும் அமைக்கப்படும்.

273. இயற்கை வேளாண்மையை வலியுறுத்திய வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்.

274. சென்னையில் தமிழிசை விழா நடத்தப்படும். இதற்காகச் சென்னையில் தமிழக அரசின் சார்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய தமிழிசை அரங்கம் பிரம்மாண்டமாக அமைக்கப்படும்.

பாட்டாளி மக்கள் கட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் 42 தலைப்புகளில் மொத்தம் 717 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக உழைக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

■